பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 18 புதன்கிழமை 02.07.2025 | அதிர்வு 333

## அர்ச்சுனாவுக்கு எதிரான மனு ஆகஸ்ட் 1 வரை ஒத்திவைப்பு!

### இடைக்காலத் தடை உத்தரவு விதிக்க நீதிமன்றம் மறுப்பு



வைத்தியர் இராம நாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### இலங்கையில் குற்றங்களைச் செய்துவிட்டு

# இந்தியாவுக்குச் தப்பிச் சென்ற மூவர் உடனடியாக நாடு கடத்தல்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து படகு வழியாக தமிழகத்துக்குள் புகுந்த சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவரையும் இந்தியா உடனடியாகவே நாடு கடத்தியது.

இலங்கையில் இருந்து கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் படகு மூலம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் தமிழகத்துக்குச் சென்றனர்.

02




# காணி கபளீகரத்துக்கு எதிரான சுமந்திரனின் வழக்கு வாபஸ்!



வடக்கு மாகாணத்தில் பொதுமக்களின் காணிகளைக் கபளீகரம் செய்யும் இலக்கோடு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அரசு கடைசி நேரத்தில் வாபஸ் பெற்றுக்கொண்டமையை அடுத்து அதனை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று உயர்நீதிமன்றத்தில் விலக்கிக்கொண்டார்.

02



# ரிஷாத் அணி வசமானது நிந்தவூர் பிரதேச சபை!

### ஒரே கட்சியில் இருந்து இருவர் தவிசாளர் பதவிக்குப் போட்டி





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக இரகசிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஆதம்பாவா அஸ்பரும், உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி 16 வயது சிறுவன் பலி

மட்டக்களப்பு, முனைக்காடு கிராமத்தில் இன்று புதன்கிழமை மின்சாரம் தாக்கி 16 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உச்சவம் இடம்பெற்று வரும் நிலையில், ஆனி உத்தர நாளான இன்று அதிகாலை வேளை விசேட பூஜை இடம்பெற்றது.

இதன்போது, மேற்படி சிறுவன் பாம்புப் புற்றுக்குப் பாலூற்றி விட்டு அதனருகில் நின்றபோது அருகில் இருந்த மின் குமிழுக்கு இணைக்கப்பட்டிருந்த மின் வடத்தில் இருந்த மின் ஒழுக்கு காரணமாக சிறுவனுக்கு மின்சாரம் தாக்கிய நிலையில் அந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

முனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த 16 வயதான செந்தில்குமரன் கியோபன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் சம்பவ இடத்துக்குச் சென்ற கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் மகிழடித்தீவு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரிஷாத் அணி...

எம்.எல்.இர்பானும் தெரிவாகினர்.

நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளர், உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் தலைமை தாங்கும் அதிகாரியுமாகிய ஆதம்லெப்பை முகம்மது அஸ்மி தலைமையில் சபை மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 13 உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்தில் சமூகமளித்திருந்தனர்.

நிந்தவூர் பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஓர் உறுப்பினரும் என 13 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இன்றைய விசேட அமர்வின்போது உள்ளூராட்சி ஆணையாளர் புதிய தவிசாளருக்கான முன்மொழிவுகளைக் கோரினார்.

இந்நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவர் புதிய தவிசாளர் தெரிவுக்காகச் சபையில் உறுப்பினர்களினால் பிரேரிக்கப்பட்டனர். இதனையடுத்துப் பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா எனச் சபையில் விடப்பட்டது. இதன்போது சிறு இழுபறிக்குப் பின்னர் பெரும்பாலான உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினர். இதற்கமைய உறுப்பினர்களால் பிரேரிக்கப்பட்டு வழிமொழியப்பட்ட இரண்டு புதிய தவிசாளர் தெரிவு உறுப்பினர்களும் இரகசிய வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏனைய உறுப்பினர்களால் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யக் கோரப்பட்டது.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட ஆதம்பாவா அஸ்பர் 6 வாக்குகளைப் பெற்று நிந்தவூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தெரிவானார். அவருக்கு எதிராகப் போட்டியிட்ட அதே கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி ஆதம்லெப்பை றியாஸ் ஆதம் 5 வாக்குகளைப் பெற்றார்.

தவிசாளர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவர் நடுநிலை வகித்தனர்.

அதையடுத்து உப தவிசாளர் தெரிவு நடைபெற்றது. உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி முகம்மது இப்றாலெப்பை இர்பான் தெரிவு செய்யப்பட்டார். ஏனைய தரப்பில் இருந்து போட்டிக்கு யாரும் முன்வராத மையால் சபையில் ஏகமனதாக உப தவிசாளராக சட்டத்தரணி முகம்மது இப்றாலெப்பை இர்பான் தெரிவானார்.

இன்றைய தெரிவு நடவடிக்கையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. நேரில் வந்து கண்காணித்தார்.

இதேவேளை, நிந்தவூர் பிரதேச சபையைச் சுற்றிப் பொலிஸார் இன்று பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது.

## அர்ச்சுனாவுக்கு...

இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று புதன்கிழமை தீர்மானித்துள்ளதுடன் அந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி சமூகச் செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் என்பவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி அசோக் பரன்,

"இராமநாதன் அர்ச்சுனா யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்ட காலப் பகுதியில் வைத்தியர் துறையில் இருந்து பணி இடை நீக்கம் செய்யப்பட்டிருந்துள்ளார்."

இதனால் அரசமைப்புச் சட்டத்தின்படி இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர்."

– என்று தெரிவித்தார்.

இருப்பினும், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்காக ஆஜரான சட்டத்தரணி சேனானி தயாரத்ன, தனது கட்சிக்காரர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது சம்பளம் இன்றி சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதால், அவரை ஓர் அரச ஊழியராகக் கருத முடியாது என்று குறிப்பிட்டார்.

அதன்படி, அவர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்தச் சட்டத் தடையும் இல்லை என்று சட்டத்தரணி சேனானி தயாரத்ன குறிப்பிட்டார்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தது.

இதேவேளை, இந்த மனு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பது மற்றும் வாக்களிப்பதைத் தடுக்கும் வகையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்கப் போவதில்லை என்று நீதிமன்ற அமர்வு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணி கபளீகரத்துக்கு...

இந்த விவகாரம் தொடர்பாக மனுதாரரான சுமந்திரனுக்கு உள்ள உரித்துகளைக் கைவிடாமல் வழக்கை வாபஸ் பெறுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி அளித்தது.

நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, அர்ஜுனா ஒபயோசேகர, மேனக விஜயசுந்தர ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த அனுமதியை அளித்தது.

இந்த வழக்கை மனுதாரர் தரப்பில் முன்னின்று வாதிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ஈ.கனகேஸ்வரன் இன்றைய வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்துக்குச் சமுகம் அளித்திருக்கவில்லை.

சுகவீனம் காரணமாக அவர் நீதிமன்றத்துக்கு வரவில்லை என அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக்குமார் மன்றில் தெரிவித்தமையோடு, இந்த வழக்கின் முக்கியத்துவம் கருதி அதற்கான முன்னுரிமையை அளித்து, உரிய சமயத்தில் இடைக்காலத் தடை உத்தரவையும் விதித்த நீதிமன்றத்துக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் நேரில் பிரசன்னமாகி இன்று நன்றி தெரிவிக்க விரும்பினாராயினும், அவர் சுகவீனம் காரணமாக இன்று மன்றுக்கு வரவில்லை என்றும், தமது நன்றியை நீதிமன்றில் பதிவு செய்யுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக்குமார் தெரிவித்தார்.

அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுரேகா அஹமத் முன்னிலையாகி இருந்தார்.

## இந்தியாவுக்கு...

மன்னார் – பேசாலையில் இருந்து படகு மூலம் மூன்று நபர்கள் இந்தியாவின் மணல்தீடையில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மீட்டனர்.

இதனையடுத்து தமிழகப் பொலிஸார் மூன்று நபர்களிடம் விசாரணை நடத்திய தன் அடிப்படையில் ஒருவர் முல்லைத்தீவு – உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் எனவும், ஏனைய இருவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் எனவும் கண்டறியப்பட்டனர்.

இவர்கள் இலங்கையில் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டதான தகவலும் தமிழகப் பொலிஸாருக்குக் கிடைத்தது.

இவற்றின் அடிப்படையில் மேற்படி மூவரும் நேற்று மாலை விமானம் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.






# ரயில் – மோ. சைக்கிள் மோதி விபத்து! தாயும் மகளும் வைத்தியசாலையில்!!

**(கி.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தை – பறநாட்டாங்கல் பகுதியில் ரயில் – மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா – ஏ 9 வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக பறநாட்டாங்கல் வீதிக்கு ஏற முற்பட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்தையடுத்து குறித்த ரயில் அரை மணிநேரம் தாமதமாகவே கொழும்பு நோக்கிப் பயணித்தது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிந்தியும் நீதி முந்தும்

பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு, முன்னைய ஆட்சிக் காலத்தின் ஊழல்கள், முறைகேடுகள், மோசடிகள், முறையற்ற வழியில் சொத்துச்சேர்த்தமை போன்றவை தொடர்பான தனது விசாரணைகளை இப்போதுதான் முடுக்கி விட்டிருக்கின்றது.

புதிதாக அதிகாரத்துக்கு வரும் அரசு தரப்பு முன்னைய ஆட்சியாளர்கள் மீது இவ்வாறு குற்றம் சுமத்தி விசாரணைகளை முன்னெடுப்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல.

ராஜபக்ஷக்கள் மீது - அவர்களின் ஆட்சி முறை மீது - பெரும் குற்றச்சாட்டுகளை அடுக்கி, அதன் அடிப்படையில் அதிகாரத்துக்கு வந்து நல்லாட்சி அரசாங்கம், வந்து சில வாரங்களுக்குள்ளேயே பிணை முறி மோசடி விடயத்தில் - வலிமையான ஊழலில் - சிக்கிக் கொண்டது.

அதற்குப் பின்னர் வந்த கோட்டாபய அரசு கூட சீனிக்கான வரியை ஒரு தலைப்பட்சமாக நீக்கி, சீனி இறக்குமதியாளர்களுக்கு 1,600 கோடி ரூபாவுக்கு மேல் முறையற்ற விதத்தில் சம்பாதிக்க வழிசெய்யும் ஊழலில் சம்பந்தப்பட்டது. சீனாவில் இருந்து இயற்கை உர இறக்குமதி ஊழல் உட்பட பல விடயங்கள் அப்போது அரங்கேறின. அவை பற்றிய விசாரணைகள் இப்போதும் நடைபெறுகின்றன. ராஜபக்ஷ காலத்தின் இரண்டு அமைச்சர்கள் இப்போது சிறைக்குச் சென்று இருக்கிறார்கள்.

ஆக, ஒவ்வொரு அரசும் பதவிக்கு வந்ததும் முன்னைய அரசுகளின் ஊழல், மோசடிகள், முறைகேடுகள் குறித்து ஆரவாரமாக விசாரிக்கும் அதேசமயம், அந்தப் புதிய அரசுகளும் அதே போன்ற ஊழல், மோசடித் தவறுகளை இழைக்காமல் இருப்பதில்லை என்பதுதான் நமது அனுபவப் பாடமாக நீடிக்கின்றது.

இப்போது தேசிய மக்கள் சக்தி அரசிலும் அதே நிலைமைதான் என்று மக்கள் கருதும் சூழ்நிலையே உள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்களை உரிய சுங்கப் பரிசோதனை இன்றி துறைமுகத்தை விட்டு வெளியே அனுப்பிய நடவடிக்கையில் பெரும் ஊழல் இருப்பதாக இப்போது சுட்டிக் காட்டப்படுகிறது.

அந்த கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்தன, தடை செய்யப்பட்ட போதை வஸ்துகள் பெருமளவில் இருந்தன என்றெல்லாம் இப்போது தகவல்கள், பேச்சுக்கள் வெளியாகின்றன.

2013 இல் டி.எம்.ஜயரட்ண பிரதமராக இருந்தபோது அவரது இணைப்புச் செயலாளரின் கடிதத்துடன் விடுவிக்கப்பட முயற்சிக்கப்பட்ட கொள்கலனுக்குள் இருந்து 131 கிலோ ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டமை மறுக்கப்படக்கூடியது அல்ல. 2017 இல் சீனி ஏற்று வந்த கொள்கலன் ஒன்றுக்குள் 218 கிலோ கொக்கேய்ன் பதுக்கப்பட்டிருந்தமை அம்பலமாகியது.

ஏன், முன்னைய ஆட்சிக் காலத்தில் சுங்க அனுமதியின்றி இவ்வாறு கொள்கலன்கள் மூலமாக விலை உயர்ந்த வாகனங்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, சட்டவிரோதமான முறையில் பதிவு செய்யப்பட்டு, நாட்டுக்குள் பயன்படுத்தப்படுகின்றன என்ற செய்தி மறுக்கப்படக்கூடியது அல்ல.

2001க்கும் 2004 முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் சமாதான முயற்சிகள் இடம் பெற்ற போது அது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு வெளிநாடுகளுக்கு சென்று திரும்பிய விடுதலைப் புலிகளின் பொதிகளை விமான நிலையத்தில் பரிசோதனை செய்யப்படாமல் வெளியேற அனுமதிக்கப்பட்டன என்று கூறி, நெருப்பு எடுத்தவர்கள்தான் இன்று ஆட்சி பீடத்தில் இருக்கிறார்கள்.

அவர்கள் 323 கொள்கலன்களை சுங்க பரிசோதனை எதுவும் இன்றி, அரச அதிகார செல்வாக்கின் மூலம் நாட்டுக்குள் அனுமதித்ததன் வாயிலாக புரிந்திருக்கும் முறைகேடு, மோசடி, ஊழல் மிக மோசமானதாகும்.

அது குறித்து நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறுகின்றன என நம்பக்கூடிய நிலைமை இல்லை.

நாடாளுமன்றப் பெரும்பான்மையையும் நிறைவேற்றதிகாரத்தையும் கையில் வைத்திருப்பதால் இந்த விடயத்தை ஆளும் தரப்பு இப்போதைக்கு மூடி மறைக்கலாம்.

ஆனால் மூடி மறைக்க உதவும் இந்த அதிகார அரண்கள் தொடர்ந்தும் அவர்கள் கையில் இருக்கும் என்று நம்புவதற்கு இல்லை. அப்போது - அது என்றோ ஒரு நாள் - உண்மை அம்பலமாகும் என்று நம்பலாம்.



# கல்முனைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக்குத் துரித நடவடிக்கை தேவை!

## அம்பாறை அரச அதிபரிடம் வேண்டுகோள்

(பாறுக் ஷிஹான்)

கல்முனைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக்கு எதிராகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் துரிதமாக. எடுக்குமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப்பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையினர் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவை நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் சந்தித்து கல்முனை கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு அபாயம் குறித்து சுட்டிக்காட்டினர். கடலரிப்பைத் தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் வேண்டிக்கொண்டனர்.

கல்முனை கடற்கரைப் பகுதியில் நிலவும் கடலரிப்பு காரணமாக கடற்கரைப் பகுதிகள் முற்றாக அழிந்துள்ளன. மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கடலரிப்பு கடற்கரை வீதியை அண்மித்துள்ளதோடு மீனவர்கள் ஓய்வெடுக்கும் தற்காலிக தங்குமிடக் கட்டடங்களும் அழிவுக்குள்ளாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு மீன்பிடி செயற்பாடுகளுக்கான அணுகல் மற்றும் சேமிப்பு வசதிகள் அழிந்துவிட்டதாகவும், இதனால் மீன சமூகம் கடுமையான பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபரிடம் தெளிவுபடுத்தினர்.

இதேவேளை, ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்த கடற்கரை பாதுகாப்பு கல்லணைத் திட்டம் முறையாக தொடரப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதையும், அதிகாரிகளிடம் பலமுறை முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட போதும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாததையும் அரசாங்க அதிபரின் கவனத்துக்கு இவர்கள் கொண்டுவந்தனர்.

இந்த விடயங்களை ஆழமாகச் செவிமடுத்த மாவட்ட அரச அதிபர், விரைவில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் வந்து பார்வையிட்டு சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களை ஒருங்கிணைத்து அவசர பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வார் என்றும் உறுதியளித்தார்.



# யாழில் சகல சபைகளும் பலவீனமாக உள்ளமையால் ஒருவரை ஒருவர் அனுசரித்தால் வெற்றியைக் காணலாம்

## சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ்

(த.சுபேசன்)

யாழில் உள்ள சபைகள் அனைத்துமே பலவீனமான கூட்டு சபைகளாகக் காணப்படுவதால் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அனுசரித்துச் செல்லாவிட்டால் எமது இலக்கில் வெற்றி காண முடியாது. ஒருவரை ஒருவர் அனுசரித்தால் மட்டுமே வெற்றியைக் காணலாம்.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற கன்னி அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர சபைக்குத் தெரிவாகியுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பிரதேச வளர்ச்சிக்காகவும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் இங்கு கூடியுள்ளனர்.

கட்சி என்பது மனதில் இருக்க வேண்டும். சபையில் அதனை நிலைநிறுத்தி பிளவுகளை ஏற்படுத்தக்கூடாது என அன்பாக வேண்டுகிறேன்.

இந்த சபை ஒரு கூட்டுக் குடும்பமாக அடுத்த நான்கு ஆண்டுகள் செயற்பட வேண்டும்.

உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான, சுயநலன் அற்ற பொதுநலன் கருதிய விடயங்களை முன்நிறுத்தித் தீர்மானங்களை எட்ட ஒத்துழைக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சபைகள் அனைத்துமே பலவீனமான கூட்டு



சபைகளாக இருப்பதால் உறுப்பினர்கள் அனுசரித்துச் செல்லாவிட்டால் எமது இலக்கில் வெற்றி காண முடியாது.

ஒரு கூட்டுக் குடும்பமாகச் செயற்பட்டால் மாத்திரமே எம்மை நம்பி வாக்களித்த மக்களுடைய தேவைகளை வினைத்திறனாக நிறைவேற்ற முடியும்.

உறுப்பினர்கள் நல்ல விடயங்களுக்கு ஆதரவு தாருங்கள் அதேநேரம் பிழையான விடயங்களுக்கு ஆட்சேபனை தெரிவியுங்கள்.

சகலருடைய அபிப்பிராயங்களும் பெறப்பட்டு மக்கள் நலனை முன்நிறுத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்போம்.

சாவகச்சேரி நகரசபை மிகவும் தொய்வான ஒரு நிலைமையில் இருப்பதாக மக்களுடைய எண்ணப்பாடுகள் காணப்படுகின்றன.

நகராட்சி மன்றத்தையும் நகரையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு எமது சபைக்கு காணப்படுகின்றது.

சாவகச்சேரி நகர் 2000ஆம் ஆண்டு யுத்தத்தில் அழிவடைந்ததன் பிற்பாடு சோபையிழந்து காணப்படுகின்றது.

அதனை மீட்டெடுக்க கடந்த காலங்களில் சரியான சந்தர்ப்பங்கள் அமையவில்லை.

அரசு எமது பக்கம் இல்லாத நிலை உள்ளது. அதேநேரம் அரசு உதவ முயற்சித்தாலும் நாட்டினுடைய பொருளாதார சூழல் அதற்கு சவாலாக இருக்கும். எனவே எமது வருமானத்தை உயர்த்தி நகரைக் கட்டியெழுப்ப வேண்டும்.

சாவகச்சேரி நகரசபை நிறைவான வருமானத்தைக் கொண்டுள்ளது. எனவே சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்க இயலும்.

அதேநேரம் அரசியல் என்பது சாக்கடை என்ற கருத்து பொதுவாக நிலவுகின்றது. அதனால்தான் பல படித்தவர்கள், சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் அரசியலுக்கு வரப் பின்னடிக்கின்றனர். இதனை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியாது.

அரசியல் புனிதமானது,தெய்வீக அருள் நிறைந்தது என்பதை ன நிரூபித்துக் காட்ட வேண்டும். எமது செயற்பாடுகளே அரசியல் புனிதமானதா அல்லது சாக்கடையா? என்பதனைத் தீர்மானிக்கும்.

உள்ளூராட்சி சபைகளே அரசியலுக்கான அடித்தளம். எனவே உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் முன்மாதிரியானவர்களாக இருக்க வேண்டும். அரசியல் நாகரீகத்தை உள்ளூராட்சி சபைகளில் இருந்து கட்டியெழுப்ப வேண்டும்.- என்றார்.

# மலையக ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகத்திலுள்ள ஆலயங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பதுளை- எட்டாம்பிட்டிய, 2 ஆம் பிரிவில் அமைந்துள்ள வள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீசிவசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் கோரிக்கைக்கு அமைவாக, 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தேர் வழங்குவது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு முதலாம் கட்டமாக 2 லட்சம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

மோதரை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாக சென்று பார்வையிடப்பட்டது. அங்கு கட்டடப் பணிக்காக 4 லட்சம் ரூபா நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கியதுடன் கள ஆய்வுகளையும் மேற்கொண்டார்.








# டிஜிட்டல் யுகத்தின் வளர்ச்சி வேகமானது பெரும் சவாலாக மாற்றம் பெற்றுள்ளது!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

தவறான தகவல்கள் என்ற விடயம் முன்னைய காலத்தில் இருந்தே இருந்து வந்தாலும், டிஜிட்டல் யுகம் அதன் அணுகலையும் வேகத்தையும் பெருக்கியுள்ளது. இதனால் பொய்யிலிருந்து உண்மையைப் பிரிப்பது மிகவும் சவாலானதாக மாறியுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் லேர்ன்ஏசியா (டுஐசுNுநயளயை) நிறுவனமும் இணைந்து நடத்திய 'இலங்கையில் தகவல் சீர்குலைவு ஆராய்ச்சியின் தொடக்கம் மற்றும் டிஜிட்டல் மீள்தன்மையை உருவாக்குவதற்கான மன்றம்' என்ற நிகழ்வு நோர்த்கேட் ஹொட்டலில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எங்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமான பிரச்சினையை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

இலங்கையில் தவறான தகவல்களை இயக்கும் மனிதக் காரணிகளைப் புரிந்துகொள்ள லேர்ன்ஏசியா அமைப்பு முக்கியமான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. அவர்களின் விரிவான ஆய்வை மேற்கொண்டிருக்கின்றார்கள். மக்கள் தொகை, சமூகப் பொருளாதார நிலை, இனம் மற்றும் ஊடக சூழல் ஆகியவை தகவல்களை நம்புவதற்கு அல்லது விமர்சன ரீதியாக மதிப்பிடுவதற்கு நமது உணர்திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இந்த புரட்சிகரமான பணியின் நோக்கமாகும்.

இன்றைய மன்றம், தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவதில் டிஜிட்டல் எழுத்தறிவுத் திட்டங்களின் செயற்றிறன், பல்வேறு உண்மைச் சரிபார்ப்பு உத்திகளின் தாக்கம் மற்றும் தகவல் சீர்குலைவுக்கு விரிவான பதிலைத் தேடும் அறிவு, நடைமுறை மற்றும் கொள்கையில் தற்போதுள்ள இடைவெளிகள் போன்ற முக்கியமான கேள்விகளை ஆராய்கின்றது.

கொழும்பை தளமாகக் கொண்ட ஒரு முன்னணி சிந்தனைக் குழுவான லேர்ன்ஏசியா 2004 ஆம் ஆண்டு முதல் ஆசிய பசிபிக் பிராந்தியம் முழுவதும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, ஆராய்ச்சி மூலம் கொள்கை மாற்றம் மற்றும் தீர்வுகளை ஊக்குவிப்பதில் முன்னணியில் உள்ளது. இந்த சிக்கலான சிக்கலைப் புரிந்துகொள்வதற்கும் தீர்வு காண்பதற்கும் அவர்களின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது.

தகவலறிந்து முடிவெடுப்பது மேலோங்கி, தவறான தகவல்களின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் குறைக்கப்படும் எதிர்காலத்தை நோக்கி நாம் ஒன்றாகச் செயற்பட முடியும்.– என்றார்

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, லேர்ன்ஏசியா அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹெலனி ஹலபய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் ஆகியோர் பங்கேற்றனர்.









# பொலிஸ் பாதுகாப்பில் உள்ளவர்கள் தொடர்பில் பரிந்துரைகளை அனைவரும் அறிய வேண்டும்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி அப்துல் அஸீஸ் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் என்பவற்றின் அடிப்படையில் 2020 ஜனவரி முதல் 2023 மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் இலங்கை பொலிஸாருடன் தொடர்புபட்ட தடுப்புக் காவல் மரணங்கள் 49 என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பில் உள்ளவர்கள் மற்றும் பொலிஸாருடனான மோதல்களின் போது ஏற்பட்ட மரணங்களை தடுப்பது தொடர்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை பொலிஸாருடனான 2025 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பொது வழிகாட்டுதல்களும் பரிந்துரைகளும் வெளியிடப்பட்டுள்ளதால் அது பற்றி அனைவரும் அறிந்து கொள்வது அவசியமாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

சர்வதேச சித்திரவதைகளுக்கெதிரான தினத்தை முன்னிட்டுக் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பொலிஸ் மற்றும் அரச, அரசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (01) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அங்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை அரசியல் அமைப்பின் 13(4) ஆம் உறுப்புரையில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உயிர்வாழ்வதற்கான உரிமை இலங்கையிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் உரித்தான ஓர் உள்ளார்ந்த உரிமையாகும். கைது செய்யப்பட முன்னரும் கைது செய்யப்படுகின்ற போதும் கைது செய்யப்பட்ட பின்னருமான பாதுகாப்பு ஒரு தனி மனிதனுக்கு இருக்கிறது.

அத்துடன் சந்தேக நபரான பெண் ஒருவரை திட்டமிட்டு கைது செய்கின்ற போது பொலிஸ் அலுவலர்களின் அணியில் ஒரு பெண் உத்தியோகத்தர் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பாக அதிகூடிய இரகசியத் தன்மையை பேணுவது தொடர்பில் உத்தரவாதமளித்தல் வேண்டும்.

ஒரு கைதி தடுப்புக்காவலில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மரணம் ஒன்று

தொடர்ச்சி▼









# பொலிஸ் பாதுகாப்பில்....

தொடர்ச்சி▲

சம்பவித்தால் மரணம் நிகழ்ந்த விதம் தொடர்பாக கருத்தில் கொள்ளாமல் அந்நிகழ்விடத்தில் பூரண விசாரணை நடத்தப்பட்டு அவ்விசாரணை முடியும் வரை மரண நிகழ்விடம் ஒரு குற்றவியல் தளமாக கருதப்படல் வேண்டும். இது பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

அனைத்து பொலிஸ் அலுவலர்களும் இவ்வழிகாட்டல்களை அமுலாக்கம் செய்வது தொடர்பான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும் என்றும் அவை இலங்கை பொலிஸாரின் பயிற்சிகள் பாடத்திட்டத்தின் தராதரங்களுக்கேற்ப ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் கட்டாயமானதுமான வழக்கமானதுமான ஆயுதங்களை கையாளும் பயிற்சிகளை வழங்குதல், அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் முதலுதவி தொடர்பான அடிப்படை அறிவையும் பயிற்சியையும் வழங்குதல் வேண்டும்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடக் கூடிய ஒரு நபரின் மனோநிலையை விரைவில் அகற்றுவதற்கான ஆற்றலையும் அறிவையும் அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் வழங்குதல், அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அவர்களின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு தேவைப்படுமிடத்து கருத்துரை வழங்கல் உள்ளிட்ட உளவியல் சமூக ஆதரவை வழங்குதல் வேண்டும்.

பொலிஸ் நிலையங்களதும் அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக்காவல் நிலையங்களதும் விசாரணக் கூடங்கள், மறியல் கூடங்கள், நடமாடும் தாழ்வாரங்கள் மற்றும் முக்கிய இடங்களுக்குக் கண்காணிப்புக் கமெரா முறைமைகளைப் பொருத்துவதற்கும் பதிவு வைத்திருப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றார்.




# போர், இடப்பெயர்வுகளுக்கு முன்னர் பாடசாலைகளில் இருந்த மாணவர் சமநிலை உருவாக்கப்பட வேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை

















போர், இடப்பெயர்வுக்கு முன்னர் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையில் எப்படியொரு சமநிலை இருந்ததோ அதைப் போன்றதொரு நிலையை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நேற்று செவ்வாய்க்கிழமை (01) பாடசாலையில் பதில் அதிபர் இ.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ச.ஸ்ரீபவானந்தராஜாவும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலனும் கலந்து கொண்டனர்.

பாடசாலைக்கு தனது நிலத்தை கொடுத்த அமரர் சுப்பிரமணியம் கனகசபையின் திருவுருவச் சிலையை ஆளுநர் திரைநீக்கம் செய்து வைத்தார். அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்வில் நகுலன் நூல் வெளியீடு செய்யப்பட்டது.

இங்கு தனது பிரதமர் விருந்தினர் உரையில் ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது, வலி. வடக்கு பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம். மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. பல குடும்பங்கள் இங்கு வந்து மீளக்குடியமர வேண்டியிருக்கின்றார்கள். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கூட மக்களை இன்னமும் குடியமர்த்தவேண்டிய தேவை இருக்கின்றது.

இடப்பெயர்வின் பின்னர் சொந்த இடத்தில் அடிப்படை வசதிகள் இல்லாது ஆரம்பிக்கப்பட்ட உங்களின் பாடசாலை இன்று படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. இந்தப் பாடசாலையில் பணியாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சரியான தலைமைத்துவமே அதற்குக் காரணம்.


அன்று அதிக மாணவர்களை கொண்டு இயங்கிய பாடசாலைகள் கூட இன்று இயங்க முடியாமல் மூடவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நகரப் பகுதியை நோக்கி போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இந்தப் பகுதிக்கு வருவதற்கு விரும்பவில்லை.


வலி. வடக்கை பொறுத்தவரை பாடசாலைகளில் வளப் பற்றாக்குறைகள் இருக்கின்றன. அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. இந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டதால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் இந்தப் பகுதி பாடசாலைகளின் கோரிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய காலத்தில் சொத்துக்களை மோசடி செய்து சொத்துக்களை, காணிகளைச் சேர்க்கும் பலர் இருக்கின்றனர். ஆனால் பாடசாலைகளுக்கு காணியை கொடுத்து உதவும் சுப்பிரமணியம் கனகசபை போன்ற எண்ணம் உள்ளவர்களால்தான் இன்றும் பல பாடசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பணத்தையோ, காணியையோ, சொத்துக்களையோ சேர்ப்பதால் நின்மதியையும் – சந்தோசத்தையம் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்கு கொடுத்து உதவுவதால் மாத்திரமே நின்மதியான – சந்தோசமான வாழ்க்கையை வாழ முடியும்.

மாணவர்கள் இந்தப் பழக்கத்தை பழகவேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவ வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்தால் உங்களுக்கு உதவுவதற்கு பலர் வருவார்கள். பிறருடைய சொத்துக்களுக்கு ஆசைப்படக் கூடாது. அப்படி பிறர் சொத்தை நாம் அபகரித்தால் எங்கள் சொத்துக்களைத்தான் நாங்கள் இழக்கவேண்டிவரும்.– என்றார்.




# ‘செம்மணி’:

## தமிழர் துயரத்தை உலகறிய வைத்த வரலாற்றுச் சாட்சியமான நூல்கள் !

**- நவீனன்**

(செம்மணி புதைகுழிகள் தற்போது சர்வதேச ரீதியில் தமிழர் துயரத்தை உலகறிய வைத்துள்ளன. இந்த வரலாற்று துயரம் பல நூறு கவிதைகளாகவும், கட்டு ரைகளாகவும் நூல் வடிவம் பெற்றுள்ளன. இருவேறு காலகட்டங்களில் வெளியான நூல்கள் பற்றிய ஓர் அலசலே இந்த ஆக்கம்.)

சிங்களப் பேரினவாத அரசின் சமாதானம் என்ற கருங்குரல் தீவிரமாக ஒலிக்கத் தொடங்கும் போதெல்லாம் தமிழ் நிலத்திலிருந்து சாம்பலே காற்றில் பறந்துள்ளது. தீச்சுவாலைகளே வானில் எழுந்தன. புகையும் குருதியும் எங்கும் மணக்க, மண்ணுக்கடியில் இருந்து எலும்புகள் தான் முளைத்தன.

**‘செம்மணி’ கவிதை நூல்**


செம்மணி புதைகுழிகளில் தமிழரின் குருதி ஆறாக ஓடியிருக்கிறது. அவலக் குரல்கள் காற்றில் பரவிக் கலந்துள்ளன. தமிழ் மக்கள் மீதான இந்தப் படு கொலையும் கொடூரமாகவே சிங்கள அரசால் நிகழ்த் தப்பட்டுள்ளமைக்கு சாட்சியங்கள் இன்னமும் தோண்டப்பட்டு வருகின்றன.

செம்மணியில் கோரமாகவே நிகழ்ந்த படுகொலைகள், உக்கிரமானதாகவும் துயரம் தருவதாகவும் அநீதியின் அடிப்படையிலும் நிகழ்ந்துள்ளன.

அதிகார ஒடுக்குமுறையாளருக்கு படுகொலைகள் குறித்த எந்த முன்யோசனையும் இருப்பதில்லைப் போலும். கொலைவெறியும் பலி கொள்ளுதலும் இனப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு வழி தருமென்ற ஒரே மூடச்சிந்தனைதான் அவர்களுக்குண்டு.

செம்மணிப் புதைகுழிகளை முதலில் தோண்டிய போது ஈழத்தின் 24 கவிஞர்களின் உள்ளத்தை வெளிக் காட்டிய கவிதை தொகுதியான “செம்மணி” கவிதை நூல் தமிழர் துயர வரலாற்றின் சாட்சியத்தை உலகறிய வைத்துள்ளது.

“வெளிச்சம்” சஞ்சிகையின் நூல் வெளியிட்டுத் தொடரில் மூன்றாவது நூலாக ‘செம்மணி’ கவிதை நூல் 1998 செப்ரெம்பரில் வன்னியில் முதலில் வெளியிடப்பட்டது.




செம்மணிப் படுகொலைகள் பற்றி, அவை எழுப்பிய உணர்வுகளை கோபத்துடனும், துயரத்துடனும் எதிர்ப்பு வலிமையுடனும் தமது படைப்புகளினூடே புலப்படுத் தியுள்ளனர் தமிழ் மண்ணின் படைப்பாளிகள்.

இந்த வகையில் செம்மணிப் புதை குழிகள் ஏற்படுத் திய உணர்வுகளை கவிதைகளாக வெளிப்படுத்தி யுள்ளனர். 1995 ஆம் ஆண்டு “ரிவிரச” என்ற பெயரில் யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த போது, அங்கிருந்து வெளியேறி, தென்மராட்சியிலும்

தொடர்ச்சி▼

# ‘செம்மணி’:

# தமிழர் துயரத்தை உலகறிய வைத்த வரலாற்றுச் சாட்சியமான நூல்கள் !

**தொடர்ச்சி▲**

வடமராட்சியிலும் தஞ்சமடைந்த மக்களை மீண்டுமொரு இராணுவ நடவடிக்கை மூலம் சிறைப்படுத்திக் கொண்டு வெளியே தன்னை மீட்பர்களாகக் காட்டி மீண்டும் சொந்த இடங்களுக்கு அது அழைத்துச் சென்றது.

தமிழ் மக்களுக்கு தம்மை இரட்சகர்களாக உரு மறைத்த சிங்கள இராணுவமும் அரசும் அவர்களை யாருங்காணாமல் பிடித்துச் சென்று, யாருமறியாமல் படுகொலை செய்து புதைத்த வஞ்சகச் செயலை அம்பலப்படுத்துகின்றன இந்த ‘செம்மணி’கவிதைகள்.

இவற்றில் படுகொலைக்கெதிரான கோபமும் கண்டனமும் கொப்பளிக்கின்றன. புதையுண்டு போன உறவுகளை இழந்த துயரம் பீறிடுகின்றது. வஞ்சகச் சூழ்ச்சியில் வெண்புறா விரித்த மாய வலையில் சிக்குண்டதற்கான அனுதாபம் எதிரொலிக்கிறது.

உங்களின் அழிவுக்கெதிரான போராடும் வல்லமையை இப்படி இழந்து போனீரே என்று புதையுண்டு போன உறவுகளை நோக்கிய விழித்தல் முன்னெழுகிறது. “இன்னும் இந்தச் சூழ்ச்சி தொடர இடமளியாதீர்” என்ற முன்னெச்சரிக்கையும் இக்கவிதைகள் மூலம் எழுப்பப்படுகிறது.

மேலும் செம்மணிப் புதைகுழிகள் எங்கள் தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமே இந்தக் கவிதைகள் எனலாம்.

**துயரத்தின் குரல்**
**கோபத்தின் முகம்**

இவை உலகின் மனச் சாட்சியை உலுப்பும் குரல்கள். எங்கள் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஒளிச்சுடர்கள். எதிரியினது சூழ்ச்சிகளின் மீது விழிப்புணர்வைத் தூண்டி, விடுதலை பெறுவதற்கான வெற்றிகளை ஈட்டித்தரும் வீரத்தை அருட்டும் உணர்வுப் பொறிகள்.

செம்மணி சாவின் ஒலி, துயரத்தின் குரல் கோபத்தின் முகம். தமிழில் இப்படி ஒரே பொருளில் பல கவிஞர்கள் எழுதிய கவிதைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

அந்தளவுக்கு இந்தச் சம்பவங்கள் மக்களிடையேயும் படைப்பாளிகளிடையேயும் ஆழமான மன அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதே இதன் அர்த்தம். ஆனால், ஒரே பொருளில் எழுதப்படும் பல கவிதைகள், அது வெவ்வேறு கவிஞர்களால் எழுதப்பட்டிருந்தாலும்கூட வாசக அனுபவத்திலும் உணர்தலிலும் சலிப்பையும் தொய்வையும் ஏற்படுத்தா வண்ணம் உள்ளன.

இது கூட தமிழ்ப்படைப் புலகில் ஒரு வேறுபட்ட புதிய வளர்ச்சிநிலைதான். தமிழ்க் கவிதையின் புதிய பண்புகளில், ஈழத்துக் கவிதைகள் சாதித்துவரும் புதிய முயற்சிகள் பெரும்பாலும் போராட்டக் கவிதைகளினூடேதான் நிகழுகின்றது. எனவே, இது தமிழ்ப் படைப்புலகிலும் விடுதலைப் போராட்ட முன்னெடுப்பிலும் ஒருமுக்கிய பங்களிப்பாகவே அமைகிறது.

**சிட்னியில் வெளியான**
**வரலாற்று சாட்சிய நூல்**

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டமை தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறிபகவன்தாஸ் எழுதிய “Schoolgirl Rape & Four Murders” எனும் நூல் சிட்னியில் வெளியிடப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சாட்சியமாக “Schoolgirl Rape & Four Murders” ஞாயிறு 05.06.2022 அன்று சிட்னியில் வெளியிடப்பட்டது.

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைது செய்யப்பட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமுக்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

செம்மணி படுகொலை தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய “Schoolgirl Rape & Four Murders” எனும்நூலில் குடும்ப உறவினர்களின் சாட்சியங்கள் மற்றும் செம்மணியில் உள்ள குழிகளில் இருந்து உடல்களை தோண்டி எடுத்ததைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் வாக்குமூலங்கள் - இந்தக் கொடூர நிகழ்வுகளின் வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளார்.

**“சமாதானத்துக்கான போர்”**

“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக “மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்த போது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந்தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ்வுகளையே சிறி பகவன்தாஸ் எழுதிய “Schoolgirl Rape & Four Murders” வரலாற்று ஆவணமாக பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994 இல் புதிதாக ஆட்சியைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசு மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்காக காணாமல் போனவர்கள் புதைக்கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழிகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1995 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததை தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ். குடாநாடு முழுவதையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

“Schoolgirl Rape & Fou

சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய “Schoolgirl Rape & Four Murders” எனும்நூலில் 1996 நடுப் பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப் பகுதியில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறுக்கு மேல் அதிகரித்ததும், செம்மணி படுகொலை தொடர்பான சாட்சியங்களையும் பதிவிட்டுள்ளார்.





# அம்பாறைக்கு புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக சுஜித் வெதமுல்ல நியமனம்!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக சுஜித் வெதமுல்ல தனது கடமைகளை கடந்த சனிக்கிழமை (28) பொறுப்பேற்றுக் கொண்டார்.

அம்பாறையில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர் சர்வமத பிரார்த்தனையுடன் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தார்.

அவரது பதவியேற்பு நிகழ்வில் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய சமூத்ரஜீவ பொலிஸ் சேவையில் இருந்து கடந்த மாதம் ஓய்வு பெற்றுச் சென்றார். அவரது ஓய்வுக்குப் பின் அம்பாறை மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக சுஜித் வெதமுல்ல நியமிக்கப்பட்டார்.

கடந்த சில தினங்களுக்க முன்னர் ஒன்பது பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் 16 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட 32 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இடமாற்றங்களின்படி இதற்கு முன்னர் பதுளை மற்றும் மொனராகலை பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த அவர் அம்பாறை மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GSM GUNAAM SUPERMARKET
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# கிழக்கு மாகாண அபிவிருத்தி; ஆளுநருடன் கலந்துரையாடல்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர மற்றும் கிழக்கு மாகாண அமைச்சுகள் மற்றும் திணைக்கள தலைவர்கள் இடையேயான கலந்துரையாடல் நேற்று (01) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலங்கமவும் இதில் கலந்து கொண்டார்.

இதில், மாகாண சபையால் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் மட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.










# குப்பைகளை அகற்றுவதில் சிரமத்தில் ஹட்டன் நகர சபை!

## மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

ஹட்டன் நகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள டன்பார் நகரம், ஹட்டன் எம்.ஆர். நகரம், காமினிபுர கிராமம், மல்லியப்புவ மற்றும் ஹட்டன் நகர மையப் பகுதி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் மக்கள் குப்பைகளை அகற்றாததால் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் நகரம் முழுவதும் கடுமையான துர்நாற்றம் மற்றும் அசுத்தம் நிலவுகிறது.

ஹட்டன் நகரில் இந்த குப்பை பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருவதாக இந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு ஹட்டன் நகர சபை உரிய நடவடிக்கை எடுக்காததால், பாடசாலை செல்லும் இளம் குழந்தைகள் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பகுதியில் துர்நாற்றம் மற்றும் கடுமையான துர்நாற்றம் வீசுகிறது. மேலும் வீதிகளில் போக்குவரத்தும் தடைபடுகிறது.

இது குறித்து ஹட்டன் நகர சபை அதிகாரிகளிடம் விசாரித்தோம். குப்பைகளை கொட்டுவதற்கு சரியான இடம் இல்லாததால் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஹட்டன் நகர சபையில் குப்பைகளை கொட்டுவதற்கு சரியான இடம் இல்லை என்றும் தெரிவித்தனர். பொறுப்பான அதிகாரிகள் அதை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.







# சமூகத்திற்காக பேசுவதும் சமூகத்தை பேச வைப்பதும்...!

## ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப் பணி !






(சமகால சர்வதேச விவகாரங்களை அலசி ஆராய்ந்து எழுதும் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் அகவை நாளான இன்று (ஜுலை 2) ஈழத்தின் மூத்த எழுத்தாளர் லெ. முருகபூபதி எழுதிய இக்கட்டுரை பிரசுரமாகிறது.)


லெ. முருகபூபதி

சிறுவர் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வாளராக 1989 ஆம் ஆண்டில் எழுத்துலகப் பிரவேசம் செய்தி ருக்கும் ஐங்கரன் விக்கினேஸ்வரா, சமகாலத்தில், அனைத்துலக அரசியல் நிலைவரங்களை கவனித்து, உடனுக்குடன் அவை பற்றியும் ஆழமாக எழுதும் சர் வதேச அரசியல் விவகார ஆய்வாளராக மாறியிருக்கிறார்.

ஆரம்பத்தில் ஐங்கரன் கவிதைத் துறையிலும் ஈடுபாடு காண்பித்தவர். அத்துடன் கட்டுரைகளும் எழுதி வந்திருப்பவர்.

இதுவரையில் பன்னிரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னும் இருட்டினில், உறக்கம் தேடும் உலகிற்காய், வெண்பனிச் சுவடுகள், காற்றோடு பேசுதல், அக்கினிப் பிரவேசம், உள்மன யாத்திரை. உனக்குள்ளேயே உள்ளிருப்பு, இழப்புக்களை இழப்போம், கல்லறைக்குள் கதிரவன் ஆகிய ஹைக்கூ கவிதைத் தொகுதிகளையும் படைத்துள்ளார்.


அத்துடன் சக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் எட்டு இளம் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்ற “கல்லறை மேலான காற்று “ எனும் கவிதைத் தொகுதியினை 1988 இல் தொகுத்தளித்தவரும் இவரே.

இதுதவிர, அற்ப ஆயுளில் யாழ்ப்பாணத்தில் கொல லப்பட்ட செல்வன் அகிலன் திருச்செல்வத்தின் கவிதைளைத் தொகுத்து “மரணம் வாழ்வின் முடிவல்ல”

தொடர்ச்சி▼








# சமூகத்திற்காக பேசுவதும் சமூகத்தை பேச வைப்பதும்...!

**தொடர்ச்சி▲**

என்ற நூலையும் 1990இல் வெளியிட்டவர்.

இலங்கை பத்திரிகை வரலாற்றின் சாதனையாளர், தமிழ் ஊடகத்துறையில் ஒரு சகாப்தமாக விளங்கிய கலாசூரி. சிவகுருநாதன் அவர்களின் இருபதாவது ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுரு நாதன்" எனும் நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

ஒன்றிணைந்திருந்த சோவியத் ரஷ்யாவில் மருத்துவத்துறையில் பயின்றிருக்கும் ஐங்கரன் விக்கி னேஸ்வரா, தமது தந்தையார் மருத்துவர் விக்கினேஸ் வராவின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் ஏனைய புதிய தலைமுறை எழுத்தாளர்களின் படைப்புகளையும் நூலுருவாக்கி வெளியிட்டு வருகிறார்.

இத்தகைய இலக்கிய சேவைகளை மேற்கொண்டு வரும் ஐங்கரன் விக்கினேஸ்வரா, அனைத்துலக அரங்கில் நடைபெறும் மாற்றங்களையும் கூர்ந்து அவதானித்து, ஊடகங்களின் ஊடாகவும், ஏனைய அரசியல் ஆய்வாளர்களின் கருத்தியல்கள் வழியாகவும், தான் கற்றதையும் பெற்றதையும் உள்வாங்கி, தனது அவதானிப்புகளை தமது கண்ணோட்டத்தில் எழுதி வருகின்றார்.

சமகாலத்தில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் உலக அரசியல் தொடர்பான பதிவுகளை இலங்கை, இந்திய, மற்றும் தமிழர் புகலிட தேசங்களிலிருந்து வெளியாகும் ஊடகங்களில் காணமுடிகிறது.


அத்துடன் அவ்வப்போது வானொலி ஊடகங்களிலும் கலை, இலக்கியம், அரசியல் சார்ந்து உரை நிகழ்த்தி வருகிறார்.

இத்தனை பணிகளையும் இவரால் எவ்வாறு அயர்ச்சியின்றி செய்யமுடிகிறது என்ற வியப்புடனேயே இவரது தொடர்ச்சியான எழுத்துப் பயணத்தை பார்க்கமுடிகிறது.

இவரது அவதானக் குறிப்புகள் ஏதோ ஒரு வகையில் எம்முடன் தொடர்பு கொண்டவையாக இருக்கின்றன. ஈழ மக்கள் வலிசுமந்த மேனியராய் உலகில் பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களில் எழுத்தாற்றல் மிக்கவர்கள் தொடர்ந்தும் கலை, இலக்கிய, சமூகம் சார்ந்தும், அரசியல் சார்ந்தும் எழுதிக் கொண்டிருக் கின்றனர். அவர்களில் ஒருவராக நம்மத்தியில் தொடர்ந்தும் எழுத்துப் பணிகளில் ஈடுபட்டுவரும் நண்பர் ஐங்கரன் விக்கினேஸ்வரா ஏற்கனவே சில சர்வதேச அரசியல் ஆய்வுகளை நூலுருவாக்கியவர்.

பாலஸ்தீன மக்களின் போராட்ட வரலாற்றை "எரியும் தேசம் பாலஸ்தீனம்" என்ற நூலையும் 2023 இல் வெளியிட்டிருக்கிறார். இஸ்ரேலிய தேச உருவாக்கம் பற்றி "ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்" என்ற நூலையும் எழுதியுள்ளார்.



அந்தவரிசையில் "தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்க ளும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்""தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ் வராவின் ஆறு நூல்கள் அண்மையில் வெளிவந்துள்ளன.

ஜீவநதி பதிப்பகத்தின் 439 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள "அரபு வசந்தம் – மாற்றமா ஏமாற்றமா" என்ற கட்டுரை தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். தற்போது நிகழும் 'உக்ரேனிய போரும் ஊடக திரிபும்' என்ற நூலையும் வரவாக்கியிருக்கிறார்.

சமூகத்துக்காக பேசுவதும், சமூகத்தை பேசவைப்ப துமே சிறந்த படைப்பாளியினதும் ஊடகவியலாளனதும் பணியாகும். ஐங்கரன் விக்கினேஸ்வராவும் அதனையே செய்து வருகின்றார்.

சில வல்லரசுகளின் உள்விவகாரங்களை மட்டுமன்றி, உலக வரைபடத்தில் எமக்கு சிறிய புள்ளிகளாகத் தோற்றம் தரும் சிறிய நாடுகளின் பிரச்சினைகளையும் இவர் கூர்ந்து அவதானித்து எழுதிவருகிறார். அதற்காக தனது நேரத்தையும் செலவிடுகிறார்.

அரசியல் ஆய்வுகளை வாசகரின் சிந்தனையில் ஊடுறுவும் வகையில் எழுதவேண்டும். அதுவே ஆய்வாளர்களின் வெற்றி. அதற்கு எளிய மொழி நடை அவசியம். ஐங்கரன் விக்கினேஸ்வராவுக்கு அந்த எளிய மொழி நடை கைவந்த கலை எனலாம்.

மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல் லாமல், செய்திகளை திரித்து, எழுதுவதற்கென்றே உலகெங்கும் ஊடகர்கள் வரிந்து கட்டிக் கொண்டிருக் கிறார்கள். அந்த விடயங்களை ஐங்கரன் விக்கினேஸ்வரா தனது எழுத்துக்களின் மூலம் அம்பலப்படுத்துகிறார்.

அதனையெல்லாம் அலசி ஆராய்ந்து எழுதி வருகிறார் ஐங்கரன் விக்கினேஸ்வரா.



# தமிழர் பாரம்பரிய விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் போட்டிகள்!

## வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இடம்பெற்ற மாபெரும் கிளித்தட்டு போட்டி

(பா.சதீசன்)

வணங்காமண் மறுவாழ்வு கழகம் பெருமையுடன் நடத்திய வடக்கு, கிழக்கு இணைந்த வணங்காமண் வெற்றிக் கிண்ணம் 2025 ஆம் ஆண்டுக்கான மாபெரும் கிளித்தட்டுப் போட்டியானது ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வணங்காமண் மறுவாழ்வு கழகத்தால் நடத்தப்படுகின்ற வணங்காமண் வெற்றிகிண்ண கிளித்தட்டு சுற்றுப் போட்டியின் ஆரம்ப போட்டியானது கடந்த மாதம் 06 ஆம் திகதி அதன் ஸ்தாபகரும், தலைவருமான தர்மலிங்கம் ஜீவரத்தினம் தலைமையில் கதிரவன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இறுதி போட்டி கரடிபிலவு, பழம்பாசி, ஒட்டிசுட்டான் பகுதி கதிரவன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அழிவு நிலையில் உள்ள தமிழர்களது பாரம்பரிய விளையாட்டாக கிளித்தட்டு இருப்பதால் அதனைக் கிராம மட்டங்களில் இருந்து மீளுருவாக்கும் நோக்கோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அணிகளை உள்வாங்கி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது.

ஆரம்ப போட்டியில் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த 10 அணிகள் பங்குபற்றி அதில் இருந்து மூன்று அணிகள் தெரிவு செய்யப்பபட்டன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து அந்தந்த மாவட்டங்களில் கிளித்தட்டு போட்டி மாவட்ட ரீதியாகவும் இடம்பெற்று ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன. அதில் தெரிவு செய்யப்படும் அணிகள் இறுதி போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட ஏ அணியும், கிளிநொச்சி மாவட்ட ஆதவன் அணியும் பலப்பரீட்சையில் ஈடுபட்டிருந்தனர். விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் 4: 3 என்ற ரீதியில் 4 பழங்களை எடுத்து யாழ். அணியினர் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர். அத்தோடு யாழ். மாவட்ட பி அணியினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடத்தை பெற்ற அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் , மூன்றாம் இடத்தை பெற்ற அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப் பரிசும் , வெற்றி பெற்ற அணிகளுக்கான பிரமாண்ட வெற்றிக் கேடயமும், அனைத்து வீரர்களுக்குமான வெற்றி பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாலை நிகழ்வாக தமிழர் பாரம்பரிய கலை நிகழ்வுகளாக சிவலீமன் தற்காப்பு கலை மன்ற மாணவர்கள் வீரதீர தற்காப்பு கலைகளாகிய சிலம்பம், சுருள் வாள், தீப்பந்தம், வாள், கேடயம் போன்ற கலைகள் பாபு மாஸ்டரின் தலைமையில் நடத்தப்பபட்டன. இதன் போது பாடசாலை மாணவர்களுக்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்கு விக்கும் நோக்குடன் கற்றல் உபகரணங்களும், சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.நிஷாந்தனும் கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு வைத்தியசாலை வைத்தியர்களான கெ.சுதர்சன், தனஞ்சயன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரன், கொக்குளாய் அ.த.க. பாடசாலை அதிபர் ஆர்.பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கிராம சேவையாளர்கள், பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# தி.மு.க. கூட்டணிக்கு மேலும் சில கட்சிகள் வருவதற்கு வாய்ப்புள்ளது; மு.க.ஸ்டாலின்

தி.மு.க. கூட்டணிக்கு வேறு கட்சிகளும் வர வாய்ப்புள்ளதாகவும் வந்தால் கலந்து பேசி முடிவு செய்வோம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் வாக்குச்சாவடி தோறும் 30 சதவீதம் பேரை தி.மு.கவில் உறுப்பினராக சேர்க்கும் 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

அப்போது, அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகம் முழுவதும் ஓரணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகிறது. நாளை முதல்தமிழ்நாடு முழுவதும் வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்திக்க இருக்கிறோம்.

தமிழகத்தின் மண், மொழி, மானம் காக்க, மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதுதான் இதன் அடிப்படை நோக்கமாகும். தமிழகத்துக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தமிழக மக்கள் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்பதற்கான முயற்சிதான் இது.

அனைத்திலும் வளர்ந்த தமிழகத்தை, மத்திய அரசு பல்வேறு வழிகளில் புறக்கணிக்கிறது. இதனை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழக மக்களும் எதிர்க்க வேண்டும். அதற்காகத்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் அனைத்து வீடுகளுக்கும் சென்று, மக்கள் அனைவரையும் சந்திக்கப் போகிறோம்.



அப்போது, தி.மு.கவில் இணைய விரும்புவோர் செயலி மற்றும் படிவம் மூலமும் தங்களை இணைத்துக் கொள்ளலாம். மேலோட்டமாக பார்த்தால், தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையாக தெரிந்தாலும், உண்மையான நோக்கம் கட்சி எல்லைகளைத் தாண்டி தமிழகத்தின் நலனுக்கானது.

தமிழகம் ஒன்றுபட்டு நிற்கும்போது, எந்த சக்தியாலும் நம்மை வீழ்த்த முடியாது என காட்டியாக வேண்டும். பா.ஜ.கவின் அரசியல், பண்பாட்டு படையெடுப்பை, தமிழகம் மீதான பொருளாதாரப் போரை எதிர்கொள்ள நெஞ்சுரம் உள்ள அரசியல் சக்தி தேவை. அதை உருவாக்கத்தான் 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரையை இயக்கமாகத் தொடங்கி இருக்கிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற பா.ஜ.கவினர் பொலிஸாரால் கைது

மத்திய அமைச்சர் அமித் ஷாவை விமர்சித்த தி.மு.கவின் எம்.பி. ஆ. ராசாவைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற பா.ஜ.கவினர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் மதுரை வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மகாராஷ்டிரா, டில்லியைப் போன்று, தமிழகத்திலும் ஆட்சியமைப்போம் என தெரிவித்திருந்தார். இதை கடுமையான சொற்களால் தி.மு.க. எம்.பி. ஆ.ராசா விமர்சித்திருந்தார்.

அதற்கு பா.ஜ.கவினர் கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, ஆ. ராசாவைக் கண்டித்து ஜூலை 1 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவித்திருந்தார்.

அதேநேரம், ஆர்ப்பாட்டத்துக்கு



பொலிஸார் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், சென்னை தண்டையார் பேட்டை, கொளத்தூர், அம்பத்தூர், அயனாவரம், சிவானந்தா சாலை, பனகல் மாளிகை, திருவள்ளுவர் நகர் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக நேற்று மாலை பா.ஜ.கவினர் திரளத் தொடங்கினர்.

அப்போது, கரு.நாகராஜன், நாராயணன் திருப்பதி, கராத்தே தியாகராஜன், வினோஜ் பி.செல்வம், ஏ.என். எஸ்.பிரசாத் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை பொலிஸார் கைது செய்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு, வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறும்போது,

"போராடக்கூட அனுமதிக்காமல் இருந்தால், தமிழகத்தில் ஜனநாயக முறையில்தான் ஆட்சி நடக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. மத்திய அமைச்சர் அமித் ஷாவை மிக மோசமான வார்த்தையில் தி.மு.க. எம். பி., ஆ.ராசா பேசுவதற்கு தி.மு.க. அரசு அனுமதிக்கிறது. அரசு எவ்வளவு அடக்குமுறையை கட்டவிழ்த்தாலும், எங்களது போராட்டம் தொடரும்." என்றார்.

# ஏர் இந்தியா விமான விபத்து குறித்த முதல்கட்ட அறிக்கை அடுத்த வாரம்

அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து கடந்த மாதம் 12 ஆம் திகதி லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணம் செய்த 241 உட்பட மொத்தம் 270 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார்.

சர்வதேச விமான போக்குவரத்து இயக்க விதிமுறைகளின்படி விபத்து



நடைபெற்ற 30 நாள்களுக்குள், விபத்து குறித்து முதல்கட்ட அறிக் கையை இந்தியா வெளியிட வேண்டும்.

வெடி விபத்து உட்பட அனைத்து கோணத்திலும் விசாரணை நடைபெறுவதாக விமான போக்குவரத்து துறை இணையமைச்சர் முரளிதர் கூறியிருந்தார். விமான விபத்து குறித்த முழு அறிக்கை வெளிவர இன்னும் 2 மாதங்கள் ஆகும். அதற்கு முன்பாக முதல்கட்ட அறிக்கை எதிர் வரும் 11 ஆம் திகதி வெளியிடப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் இணக்கம்; ட்ரம்ப் அறிவிப்பு




காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்தை இஸ்ரேல் ஒப்புக்கொண்டால் அதனை ஹமாஸ் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் ஹமாஸ் இதனை ஏற்றுக்கொள்ளா விட்டால் நிலைமை மோசமாகிவிடும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா அனைத்து தரப்பினரு டனும் இணைந்து செயற்படும் என்றும், இறுதிப் போர் நிறுத்த முன்மொழிவை கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் வழங்கவுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

# ட்ரம்பின் பைத்தியக்காரத்தனமான யோசனை நிறைவேறினால் புதிய கட்சி உருவாகும்; மஸ்க்



ட்ரம்பின் பைத்தியக்காரத்தனமான செலவு யோசனை நிறைவேறினால், அடுத்த நாள் புதிய கட்சி உருவாகும் என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கொண்டு வந்துள்ள வரி மற்றும் செலவு யோசனைக்கு, எலான் மஸ்க் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

இதற்கிடையே, இந்த யோசனை அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டதையடுத்து, ஈலோன் மஸ்க் தனது அதிருப்தியை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும்போது,

“வரி மற்றும் செலவு யோசனை, வரலாற்றில் மிகப் பெரிய கடன் அதிகரிப்புக்கு வழிவகுக்கும்.

இந்த யோசனைக்கு வாக்களித்த ஒவ்வொரு நாடாளு மன்ற உறுப்பினரும் வெட்கத்தால் தலைகுனிய வேண்டும்.

குடியரசு கட்சி உறுப்பினர்கள் இந்த பூமியில் செய்யும் கடைசி விஷயம் இதுவாக இருந்தால், அடுத்த ஆண்டு தங்கள் முதன்மைத் தேர்தலை இழப்பார்கள்.

இந்த பைத்தியக்காரத்தனமான செலவு யோசனை நிறைவேறினால், அடுத்த நாள் புதிய கட்சி உருவாகும்.

மக்களுக்கு உண்மையில் ஒரு குரல் இருக்க வேண் டும் என்பதற்காக நமது நாட்டிற்கு ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சிக்கு மாற்றாக ஒரு கட்சி தேவை.

அமெரிக்காவில் புதிய கட்சியைத் தொடங்க வேண்டிய நேரம் இதுவாகும்” என எலான் மஸ்க் கூறியுள்ளார்.

இந்நிலையில், தற்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் சமூக வலைதள பதிவில் “கடையை மூடிவிட்டு தென் ஆப்பிரிக்காவுக்கே திரும்ப செல்ல நேரிடும். வர லாற்றில் அதிக மானியங்களை பெற்ற மனிதர்தான் மஸ்க்” என குறிப்பிட்டிருந்தார்.

அரசின் ஒப்பந்தங்கள் மற்றும் மானியங்கள் மட்டும் கிடைக்காமல் போயிருந்தால் மஸ்கின் நிறுவனங்கள் சரிவை சந்தித்திருக்கும். விண்கலன் ஏவுதல், செயற் கைக்கோள்களை நிறுவுதல் மற்றும் மின்சார கார் உற்பத்தி போன்றவை எப்போதோ முடிவுக்கு வந்து இருக்கும் என ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

# ஜப்பானில் சிறுவர்களை விட செல்லப்பிராணிகள் அதிகம்



ஜப்பானில், 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விட செல்லப்பிரா ணிகளே அதிகம் இருப்பதாக சமீபத் திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான ஜப்பான், தொழில்நுட்பம், பொருளாதாரம் உள் ளிட்டவற்றில் வேகமாக வளர்ந்தா லும், அங்கு குழந்தைகளின் பிறப்பு விகி தம் குறைந்துகொண்டே செல்கின்றது.

இந்தநிலையில், தற்போது வெளி வந்துள்ள புதிய தரவு மற்றொரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி ஜப்பானில் 15 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் 14 லட்சம் பேர் உள்ள நிலையில், நாய், பூனை உள் ளிட்ட செல்லப்பிராணிகள் எண் ணிக்கை 16 லட்சமாக உள்ளது.

கொரோனா காலக்கட்டத்திற்குப் பின்னரே இந்த எண்ணிக்கை வேக மாக உயர்ந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் தனியாக வசிக்கும் முதியோர் துணைக்கும், ஆறுதலுக் கும் செல்லப்பிராணிகளை அதிகள வில் வளர்க்கின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

புதன்கிழமை 02/07/2025

**27,000 கோழிகள் உடல் கருகி பலி**

பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் லாங்கலி நகரில் உள்ள ஒரு கோழி பண்ணையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 27,000 கோழிகள் உயிரிழந்துள்ளன.

03▶

# கனடா அடிபணிந்துவிட்டது; அமெரிக்க தரப்பு விமர்சனம்

**கனடாவில் இயங்கும் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது டிஜிட்டல் சேவை வரி தொடரும் என கனடா தரப்பு தெரிவித்திருந்தது.**

**உடனே, டிஜிட்டல் சேவை வரி விதித்தால், கனடாவுடன் வர்த்தக பேச்சு வார்த்தைகளை நிறுத்துவதாக அறிவித்த ட்ரம்ப், கூடுதல் வரிகள் விதிப்பேன் என மிரட்டினார்.**

**அதைத் தொடர்ந்து, டிஜிட்டல் சேவை வரி விதிக்கும் திட்டத்தை கைவிடுவதாக கனடா அறிவித்தது.**

பெரிய அளவிலான பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக கனடா அரசு டிஜிட்டல் சேவை வரி விதிப்பை கைவிடுவதாக கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்தார்.

இந்நிலையில், மீண்டும் கனடாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா துவங்கியுள்ளது.

என்றாலும், கனடாவை கேலி பேசுவதையும் அவமதிப்பதையும் அமெரிக்கா விடவில்லை .

வெள்ளை மாளிகை ஊடகச் செயலரான கரோலின், கனடா டிஜிட்டல் சேவை வரி விதிக்க முயற்சித்ததன் மூலம் தவறு செய்துவிட்டதாகவும், ஞாயிற்றுக்கிழமை ட்ரம்பை தொலைபேசியில் அழைத்த கார்னி வரி விதிப்பைக் கைவிடுவதாகத் தெரிவித்ததார் என கூறியுள்ளார்.

அத்துடன் நிறுத்தாமல், ட்ரம்ப் கொடுத்த அழுத்தம் காரணமாக, மார்க் கார்னி வளைந்துகொடுத்துவிட்டார் எனவும் கூறியுள்ளது வெள்ளை மாளிகை தரப்பு.

ஜஸ்டின் ட்ரூடோ கனடாவின் பிரதமராக இருந்தபோதும் அமெரிக்கா கனடாவை கேலி பேசி வந்தது. இப்போது கனடாவில் ஆட்சி மாறினாலும் அவமதிப்பு மட்டும் மாறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.






# சாஸ்காட்சுவான் தெற்கில் அவசரநிலை அறிவிப்பு

கனடாவின் சாஸ்காட்சுவானின் தெற்குப்பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் கடும் வறட்சியின் காரணமாக, மேபல் கிரிக். பொக்ஸ்வெலி மற்றும் என்டர்பிரைஸ் ஆகிய கிராமப்புற மாநகராட்சிகள், ஏற்கனவே அவசரநிலை அறிவித்துள்ள பிக் ஸ்டிக் மாநகராட்சியிலும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறோம். இளங்காலம் முதல் இப்போது வரை சராசரியாக ஒரு இன்ச் மழை கூட கிடைக்கவில்லை என பிக் ஸ்டிக் மாநகராட்சியின் தலைவர் க்விண்டன் ஜாக்ஸ்ட்ரைட் தெரிவித்துள்ளார்.

தீ அபாயம் மிக அதிகம், மக்கள் தங்கள் மாட்டுக்கு கூடுதலான தீவனத்தை சேமிக்கப் போராடுகிறார்கள். ஆனால் பல இடங்களில் புல்வெளிகள் வறண்டு கொண்டிருக்கின்றன என குறிப்பிட்டுள்ளார்.



# கனடாவில் கார் மோதி 99 வயது மூதாட்டி பலி

கனடாவின் டொரொண்டோ நகரத்தில் உள்ள நார்த் யோர்க் பகுதியில் கடந்த வாரம் கார் மோதி காயமடைந்த 99 வயது மூதாட்டி, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து ஜூன் 24 ஆம் திகதி மதியம் 1 மணி அளவில், விக்டோரியா பார்க் மற்றும் சன்ரைஸ் அவென்யூ சந்திப்பில், எக்லிண்டன் அவென்யூ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்த நேரத்தில் விக்டோரியா பார்க் சாலையில் வடக்கு திசையில் சென்ற 40 வயதுடைய ஓர் ஆண், சன்ரைஸ் அவென்யூவிற்குள் இடதுபக்கம் திரும்பிய போது தெருவை கடக்க முயன்ற பாதசாரியை மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிர காயங்களுடன் பாதிக்கப்பட்ட அந்த முதிய பெண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், எனினும் ஜூன் 30 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

மூதாட்டி தொடர்பான விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. விபத்து நேரத்தில் வாகன ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், இப்போது வரை எந்த வழக்குகளும் பதிவு செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வழக்குத் தொடங்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்க முன்னர், பல விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான தகவல்கள் யாருக்கு கிடைத்தாலும், பொலிஸாரை 416-808-1900 என்ற எண்ணில் அல்லது Crime Stoppers இணையதளம் வழியாக தொடர்பு கொள்ளலாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பெண்ணை பாலியல் தொழிலுக்கு கட்டாயப்படுத்திய நபர் கைது




பெண் ஒருவரை பாலியல் தொழிலுக்கு கட்டாயப்படுத்திய குற்றச்சாட்டில், ஒன்டாரியோ மாகாணத்தைச் சேர்ந்த 28 வயதான கொரி பேட்ரிக் மாக்கி என்பவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நோவா ஸ்கோஷியா மனித கடத்தல் பிரிவில் கடந்த பெப்ரவரி மாதம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதில், 2016 இல் ஒரு பெண் பாலியல் தொழிலில் ஈடுபட கட்டாயப்படுத்தப்பட்டார் என தகவல் வெளியானது.

விசாரணையின் போது, சம்பவங்கள் நோவா ஸ்கோஷியாவில் இரண்டு மாதங்களுக்கு மேல் நடந்ததையும், குற்றவாளியான மாக்கி தற்போது ஒன்டாரியோவின் கிங்ஸ்டனில் வசிப்பதும் தெரியவந்தது.

ஜூன் 22ஆம் திகதி, அதிகாரிகள் கிங்ஸ்டன் நகரத்திற்கு பயணம் செய்து அவரை கைது செய்தனர். மாக்கி ஹாலிஃபாக்ஸ் மாகாண நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில், சில நிபந்தனைகளுடன் பிணையில்விடுவிக்கப்பட்டார்.



# நோயாளியுடன் தகாத உறவு; தாதி ஒருவருக்கு தண்டனை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பணியாற்றும் தாதி ஒருவர் நோயாளியுடன் தகாத உறவு பேணியமைக்காக தண்டிக்கப் பட்டுள்ளார்.

மேற்படி தாதி, ஒரு நோயாளியுடன் தனிப்பட்ட மற்றும் பாலுறவு உறவில் ஈடுபட்டதற்காக 12 மாதங்களுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 2023 ஜூலை முதல் செப்டம்பர் வரை இடம்பெற்றுள்ளது. இந்த உறவை தனிப்பட்ட மற்றும் பாலுறவுசார் என தாதியர் கல்லூரி விபரித்துள்ளது.

மேற்படி தாதி, மனநல சிக்கலால் தாம் தவறு செய்ததாக ஆவணப்படுத்தியுள்ளார் என்பதுடன், அவரது பெயர் தனியுரிமை காரணமாக வெளியிடப் படவில்லை. இந்த நடவடிக்கைகள், எழுந்துள்ள தொழில்முறை சிக்கல்களுக்கு முறையான தீர்வாகும், மேலும் பொது மக் களின் பாதுகாப்பையும் உறுதி செய் யும் என விசாரணை குழு தெரிவித்துள்ளது.



## 27,000 கோழிகள்...

( C01 தொடர்ச்சி)

இந்த தகவலை அந்தப் பகுதியின் தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் ஞாயிறு காலை 2 மணியளவில், அமெரிக்க எல்லைக்கு அருகிலுள்ள 256 ஆவது வீதி பகுதியில் ஏற்பட்டதாக, லாங்க்லி நகர துணை தீயணைப்பு தலைவர் கோரி பார்க்கர் தெரிவித்துள்ளார்.

தீ பற்றி தகவல் கிடைத்தவுடன் குழுக்கள் விரைந்து சம்பவ இடத்திற்குச் சென்றன. அப்போது தீ வேகமாக பரவி கொண்டிருந்ததாகவும், கூடுதல் குழுக்கள் அவசரமாக அழைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீயை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. கட்டிடங்கள் மிகவும் பெரியவை. எனினும் எங்கள் குழுவினர் தீயை மேலும் பரவாமல் தடுப்பதில் சிறப்பாக செயல்பட்டனர் என பார்க்கர் குறிப்பிட்டுள்ளார்.

தீயணைப்பு பணியில் ஈடுபட்ட இரு வீரர்கள் வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு பெரிய கட்டடங்கள் முழுமையாக அழிந்தன என்றும் அதில் இருந்த 27,000 கோழிகள் தீயில் எரிந்து உயிரிழந்தன எனவும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தற்போது, சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.